# யுவபுரஸ்கார் விருது பெற்ற புதினங்களில் மனித மாண்புகள்

கவிதா.த
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழியல் மற்றும் பண்பாட்டுப்புலம்,
தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், சென்னை-15.
மின்னஞ்சல் kavi6662@gmail.com

40

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைய இலக்கியங்கள் சமூகத்திற்கான மாண்புகளையும் கடமைகளையும் அறிவுறுத்தியது போன்றே இக்கால இலக்கியங்கள் தனிமனிதர்களின் மாண்புகளை பதிவு செய்துள்ளது. கடமை , நேர்மை, ஈகை, உயர்ந்த உள்ளம் போன்ற பல்வேறு மாண்புகளை உள்ளடக்கியே மனித வாழ்வு அமைந்துள்ளது என்பது இக்கட்டுரையின் ஆய்வு சுருக்கமாக அமைகிறது.

**ஆய்வு நோக்கம்**

பண்டைய இலக்கியங்கள் மனிதனுக்கான விழுமியங்களை அறிவுறுத்தியது போலவே இக்கால இலக்கியங்களும் தனிமனிதர்களின் விழுமியங்களையும் அவர்களது மாண்புகளையும் பதிவு செய்துள்ளதை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

**முன்னுரை**

மனித குலம் நாகரிக வளர்ச்சி அடைந்ததை விளக்கும் பண்பே ஒருவரின் மாண்பாக கொள்ளலாம். 'மாண்பு' என்ற சொல்லுக்கு, க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி உன்னதத் தன்மை , சிறப்பு, பெருமை ஆகிய பொருளைத் தருகிறது. தமிழ் இலக்கியம் தோன்றிய காலம் முதல் மனிதனின் உயர்ந்த மாண்புகளை பறைசாற்றும் நோக்கிலேயே நமது இலக்கியங்கள் படைக்கப்பட்டு வந்துள்ளன.

"ஈன்று புறந்தருதல் எங்களைக் கடனே"[1]

எனும் பொன்முடியார் பாடல் ஒவ்வொருவரும் கடமை தவறாமல் செயலாற்றி மாண்புடன் வாழ்வதை உறுதி செய்யவே பாடப்பட்டுள்ளது. ஒவ்வொருவரின் கடமை , ஒழுக்கம், அறம் போன்றவை மாண்புகளை காக்கும் அரண்களாக விளங்கின. ஒரு மன்னனுக்கு , வறியவர்க்கு ஈவதும், தன் நாட்டு மக்களைக் காப்பதும் , எதிரிகளை புறமுதுகிட்டு ஓடச் செய்வதும் சிறந்த மாண்பாகும். தலைவன் பிரிந்து சென்ற பின் அவனை நினைத்து கற்புத் திறம்பாமல் இருத்தல் தலைவியின் மாண்பாக கொள்ளப்படுகிறது.

**இக்காலப் புதினங்களில் மனித மாண்புகள்**

கால ஓட்டத்தில் மாற்றம் ஒன்றே மாறாததாகும். அதற்கேற்ப வடிவம் , உத்தி, பேசுபொருள் என அனைத்திலும் இக்கால இலக்கியங்கள் மாற்றம் பெற்றுள்ளன. ஆனால் மனிதனை மனிதனாக அடையாளப்படுத்தும் மாண்புகள் தொடர்ந்து வருவதே மானிட குலத்தின் ஒப்பற்ற தன்மையாக கொள்ளலாம்.

**மாண்புகள்-அன்று**

பண்டைய இலக்கியங்கள் தனிமனிதனுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை. சமூகத்தோடு அவனுக்குள்ள உறவைப் பேணவும் சமூகத்தில் மாண்புடையவனாக மதிக்கப்படவுமே அவை அறிவுரை வழங்கின

"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல்"[2]

என்கிறார் வள்ளுவர். தன்னை அண்டி வாழும் குடிகளிடம் அளவரிந்து வரி வசூலித்தால்

"கோடியாத்து நாடு பெரிதும் நந்தும்"[3]

என்ற பிசிராந்தையார் கூற்றும்

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்"[4]

என்று மோசிகீரனாரும் குறிப்பிடுவதை சுட்டலாம்.தனிமனிதன் என்பவன் தான் வாழும் சமூகத்திற்கு எவ்வகையிலானும் பயனுடையவனாக திகழ வேண்டும் அதுவே அவனை மாண்புடையவனாக்கும் என பண்டைய இலக்கியங்கள் அறிவுறுத்துகின்றன.

**மாண்புகள் இன்று**

இன்றைய உலகில் தனி மனிதன் முதன்மையானவனாகத் திகழ்கிறான். அவன் மீதான சமூகக் கட்டுப்பாடு குறைந்துள்ளது எனலாம். எனவே அவனைக் கண்காணிக்கும் சமூகச் செயல்பாடு தனித்தே நிற்கிறது. அதற்காக தொன்று தொட்டு வரும் மாண்புகளை மனிதகுலம் இழந்து விடவில்லை. எவ்வித கண்காணிப்புகளும் இல்லாத போதும் மாண்புகளைப் பின்பற்றியே வருகின்றது.அவையே சமூக நிலை நிற்பிற்கும் மனித நேயத்திற்கும் காரணமாக அமைந்திருக்கிறது.

**நேர்மை**

சுயநலப் போக்கும் போட்டிகளும் அதிகரித்துவிட்ட ஒரு சூழலிலும் ஒரு மனிதன் அவனுடைய குறைந்தபட்ச நேர்மையைக் கடைப்பிடிக்கிறான் என்பதை இன்றைய புதினங்கள் பதிவு செய்கின்றன. சேவல் கட்டு என்ற விளையாட்டில் நேர்மை என்பது மிக முக்கியமாக கடைபிடிக்கப்பட வேண்டிய ஒன்று. அதில் குரு என்பவர் நடுநிலை மாறாதவராக இருக்க வேண்டியது அவசியம். " ஆப்பனூர்காரி சேவல் ஒன்றறை பூட்டுடி… கடுகுச் சந்தைக்காரி சேவல் ஒரு பூட்டுடி. இரண்டுக்கும் தோது வராது. போய் அடுத்த சேவலைக் கொண்டா…. "[5] என்பதோடு இந்த சேவலுக்கு ஏன் அளவு கத்தி முனை பெரிசா இருக்கு? வேற சாவ கத்திய கெட்டுங்கடி"[6]என்பதும் நேர்மை தவறாமைக்கு சான்று பகர்கிறது. நேர்மையைக் கடைப்பிடிக்க சாதியோ பொருளாதாரமோ ஒரு தடையல்ல என்பதற்கு தூப்புக்காரி புதினத்தில் இடம்பெறும் மாரி கதாபாத்திரத்தின்."ஓய் ஒமக்குத் தெரியுமா? இந்த மாரி இதுவரை அஞ்சி பைசா களவாணவோ, யாரையும் வஞ்சிக்கணும்னோ, பொண்ணுங்க விரும்பாம ஒரு மாறி நடக்கவோ போனதில்ல"[7]என்ற கூற்று எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

**கடமை உணர்வு**

கடமை உணர்வு என்பதனை இலக்கியங்கள் பல நூற்றாண்டுகளாக போதிக்கின்றன. பருக்கை புதினத்தில் கேட்டரிங் தொழிலில் கடினமான பணிச் சூழலை எதிர்கொள்ளும் போதும் வறுமை , பசி போன்றவற்றை எதிர்கொள்ளும் போதும் கடமையுணர்வுடன் செயல்படும் மனிதர்களை இப்புதினம்

வழியாக அறிந்து கொள்ள முடிகிறது. "சாப்பாடு என்று வந்தவர்களுக்கு பரிமாறாமல் போவதற்கு மனம் ஒத்துழைப்பதில்லை "[8]என்ற இளைஞனின் கூற்று கடமையுணர்வை எடுத்துக்காட்டுகிறது. சமூகத்தால் அடிமட்டத் தொழிலாகக் கருதப்பட்டாலும் அத்தொழில் செய்பவர்கள் தொழிலின் பெயரால் தீண்டாமைக்குட்பட்டாலும் அத்தொழில் செய்யும் மக்களிடம் கடமை உணர்வு மேலோங்கியே காணப்படுகிறது என்பதற்கு "இதுதான் தொழிலுன்னு இறங்கிட்டா அப்புறம் எதை பத்தியும் யோசிக்கப்படாது எதோ அவமானத் தொழிலை செய்யறதா நெனச்சு வெட்கப்படக் கூடாது. மனசுக்குள்ள தாழ்ந்தும் போகக்கூடாது"[9] என்ற கூற்று சான்று பகர்கிறது.

**உயர்ந்த உள்ளம்**

"யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்ற உலக சிந்தனை கொண்ட உயரிய மாண்பு தமிழர்களுடையது. அம்மரபின் தொடர்ச்சியை இக்காலத் தமிழர்களும் தங்களுக்குள் தக்க வைத்துக் கொண்டுள்ளனர் என்பதை இன்றைய புதினங்கள் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது. கற்பு குறித்த கருத்தாக்கமும் தந்தை வழிச் சமூகத்தின் ஆணாதிக்க சிந்தனையும் இறுகிப் போயிருக்கும் ஒரு சமூகத்தில், தான் விரும்பிய பெண் இன்னொருவருடைய குழந்தையைச் சுமந்து கொண்டிருப்பதை அறிந்தும் அவன் அப்பெண்ணை ஏமாற்றி விட்டபோது அவள் வாழ்வு கேள்விக்குறியாகிவிடும் என்பதனால் அவளை ஏற்றுக் கொள்ள முன்வரும் உயர்ந்த உள்ளம் கொண்டவனாக மாரி என்ற பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. "நீ சம்மதிச்சா இந்தக் குழந்தைக்கு அப்பனா மாறக்கூட எனக்கு சம்மதம்"[10] என்ற மாரியின் கூற்று அவனுடைய உயர்ந்த உள்ளத்தைப் பறைசாற்றுகிறது. கொடிய வறுமையால் அல்லலுறும்போதும் பிறருக்காக சிந்திப்பது உயர்ந்த குணத்தைப் பறைசாற்றுகிறது. பருக்கை புதினத்தில் பசியோடு போராடும் இளைஞன் ஒருவனுக்கு கிடைக்கும் பழத்தை அவன் எடுக்காமல் தன் பசியை அடக்கிய வண்ணம் தாண்டி வருகிறான். "வேணாம் நம்மள மாதிரி தானே யாராவது ஆசையோட வாங்கி வெச்சிருப்பாங்க.. நாம தூக்கிட்டு போயிட்டா பாவம் ஏமாந்து போயிருவாங்களே....."[11] என்று பிறருக்காக இறங்குகிறான்..

மேலும் பொருளாதார நெருக்கடியில் உழலும் மாணவர்களிடம் கட்டணம் வாங்காமல் மருத்துவம் செய்யும் மருத்துவர் , கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிக்கு உதவும் விடுதி மாணவர்கள் , தான் சாப்பிட வழியில்லாத போதும் வயதான பெண்மணிக்கு பிரியாணியை வழங்கும் பாத்திரம் என ஏழ்மையிலும் வறுமையிலும் உயர்ந்த உள்ளம் படைத்த செம்மாந்த மாந்தர்களைப் படைத்துக் காட்டுகிறார்.

**ஈகை**

பண்டைத் தமிழ் சமூகத்தில் ஈகை என்பது வீரத்திற்கிணையாக போற்றப்பட்டுள்ளது.

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே

பிறவுமெல்லா மோரோக்கும்மே

செல்வத்துப் பயனே ஈதல்"[12]

என்கிறார் நக்கீரர். வறியவர்க்கு ஈதல் பண்பு செல்வர்க்கும் அரசர்க்கும் உரிய பண்பாக கூறப்படுகிறது. இக்கால இலக்கியங்களிலும் ஈதல் பண்பு பல்வேறு இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது சேவல்கட்டு புதினத்தில் வறுமையில் இருக்கும் ஆறுமுகத்திற்கு போத்தைய்யா சேவல் வாங்கியதற்கும் மேலாக பணம் கொடுப்பதைச் சுட்டலாம்.

**தொகுப்புரை**

மாண்புடன் நடந்து கொள்ளுதல் மனித இனத்தின் அடிப்படைப் பண்பாக விளங்குவதை யுவபுரஸ்கார் விருது பெற்ற புதினங்கள் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது. பொருளாதார வயப்பட்ட இக்காலகட்டத்திலும் எளியவர் முதல் அனைவரும் அவரவருக்குரிய மாண்புடன் நடந்து கொள்கின்றனர் என்பதை மேற்குறிப்பிட்ட தரவுகளில் இருந்தும் அறிந்து கொள்ள முடிகிறது. கடமை உணர்வு, ஈகை, உயர்ந்த உள்ளம் போன்ற உயரிய மாண்புகள் மனித இனத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க உதவுகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. புறம் 312
2. குறள் 70
3. புறம் 184
4. புறம் 186
5. தவசி.ம, சேவல் கட்டு ப. 26
6. மேலது, ப. 29
7. தூப்புக்காரி,ப. 52
8. பருக்கை, ப.132
9. தூப்புக்காரி, ப. 78
10. மேலது, ப. 110
11. பருக்கை, ப.12
12. புறநானூறு,ப.189

**துணைநூல் பட்டியல்**

1. புறநானூறு,ஞ.மாணிக்கவாசகன் உரை,,உமா பதிப்பகம்,2019
2. திருக்குறள் தெளிவுரை,மு.வ,கிண்டில் எடிஷன்,
3. ம.தவசி,சேவல்கட்டு,புதுமைப்பித்தன் பதிப்பகம்,2009
4. கிரியாவின் தற்கால தமிழகராதி, 2008
5. மலர்வதி,தூப்புக்காரி,மதிபுக்ஸ்,2017
6. வீரபாண்டியன்,பருக்கை, பரிசல் பதிப்பகம்,2019